**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை – 2015**

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நியமத்தின் பிரகாரம் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் காணியின் உரித்து சபைக்குச் சொந்தமற்றிருந்ததுடன் அது தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்களுக்குரிய ரூபா 5,116,750 தொகையான காலக்கழிவு திறைசேரி ஆராய்ச்சி மானியங்களிலிருந்து கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது சபை நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மற்றும் அட்டுறு பிரயாணச் செலவினங்களின் முறையே ரூபா 656,761 மற்றும் ரூபா 78,200 தொகைகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 யூன் 01 ஆந் திகதி முதல் HM 1-1 சம்பளத் தொகுதி உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகன உரித்து கிடைத்திருந்த போதிலும், தமது தனிப்பட்ட வாகனங்களை கடமை நடவடிக்கைகளுக்காக சென்று வருவதற்காக பயன்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாமல், 2015 இல் 03 மாதங்களிற்காக உத்தியோகபூர்வ வாகனப் படிகள் மற்றும் எரிபொருள் படியாக ரூபா 516,550 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பாதுகாப்பு சேவைகள் வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2015 பெப்ரவரி மாதத்தில் ரூபா 89,196 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நாளாந்த ஊழியர் வருகை வெளிச்செல்லுதல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் 2013 ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 2,629,517 தொகையான செயற்திட்டக் கணக்கின் மீதி 2015 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,796,555 தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 3,594,269 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,640,735 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகள் ரூபா 5,235,004 அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் அரசாங்க மூலதன மானியம் ரூபா 4,242,810 இனால் அதிகரித்தமை மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 1,540,188 இனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையும் நிறுவனத்தில் தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,594,269 தொகையான தேறிய இலாபம் ஏற்பட்டிருந்தது. உழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வுகளைக் கவனத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 10,396,045 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 34,888,202 வரை அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

(அ) 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொருளாதார ரீதியாகவும், வினைத்திறனாகவும், சூழலுக்கு இசைவானதாகவும் மற்றும் சமூகரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வலுவான உள்ளக நிறுவக ஒத்துழைப்புடன்கூடிய கமத்தொழில் ஆராய்ச்சி ஊடாக

கைத்தொழில் பிரிவின் வினைத்திறன், இலாபகரமானதாகவும் நிலைபேறானதாகவும் உள்ளதை உறுதிப்படுத்துதல் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பன சபையின் பிரதான பணியாக இருந்த போதிலும், அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதி ஏற்பாடுகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமையினால் அந்த பணிகளை போதியளவில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் மூலதன மானியமாக ரூபா 20,447,000 தொகை கிடைத்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டிற்காக தேவையான மூலதன மானியம் 2014 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதத்திற்கு முன்னர் விண்ணப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மூலதன மானியமாக ரூபா 978,655 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது.

(இ) மேற்கூறப்பட்ட காரணத்தால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி, தேசிய கமத்தொழில் முன்னுரிமைகளைத் தயாரித்தல் மற்றும் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பீடுகளுக்குரிய செயற்திட்டங்கள் தொடர்பான 86 கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 62 கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே 60 தேசிய கமத்தொழில் ஆராய்ச்சிகளின் களச் செயற்திட்ட மதிப்பீட்டிற்கும் 06 ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்பான வெளிவாரி மீளாய்வுகளை மேற்கொள்ளுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், முறையே 51 ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டிராததுடன் 05 ஆராய்ச்சி நிறுவனங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை தமது நோக்கம் மற்றும் இலக்குகளை செயற்திறனானதாகவும் மிகவும் வினைத்திறனானதாகவும் நிறைவேற்றுவதற்காக தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு கணனி வன்பொருள் மற்றும் மென்பொருளை (நிகழ்ச்சித்திட்டம்) ஸ்தாபிப்பதற்காக முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 2,404,427 தொகை ஆரம்பச் செலவினமொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த முறைமை, சபையின் பணிகளை அமுல்படுத்துவதற்காக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 09 பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2014 நவம்பர் 23 மற்றும் 26 ஆந் திகதிகளில் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 மே 12 வரையிலும் இது தொடர்பான நேர்முகப்பரீட்சையை நடாத்தி ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபையின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இணையதள வசதிகள் அவசியமான உத்தியோகத்தர்களுக்காக ஆகக்குறைந்த கிரயத்தில் உபயோகிக்கக் கூடிய இணையதள இணைப்புக்களைத் தெரிவு செய்யாமல் முன்னைய ஆண்டில் ரூபா 1,836,027 தொகை செலவில் மாதாந்த வாடகைத் தொகை ரூபா 56,120 ஆன டெலிகொம் லீஸ்லைன் இணைப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 673,440 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய PF/PE/21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் ஆண்டு தொடங்கும் போது பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டம் அங்கீகாரத்திற்காக 2015 நவம்பர் 06 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை கமத்தொழில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் மூலதன செலவினத்திற்காக பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 20 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதி நிர்வாகம் | திறைசேரியிலிருந்து பெறப்படுகின்ற மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களின் விண்ணப்பங்களில் தாமதம் காணப்பட்டமை |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | i இருப்புப் பெறுவனவுக் குறிப்பில் பெறுவனவுப் பத்திர இலக்கம் குறிப்பிடப்படாமை |
| | ii உரிய அதிகாரமின்றி இருப்பு விநியோகிக்கப்பட்டமை |
| | iii நுகர்வுப் பொருட்களின் விநியோகம் இருப்புப் பதிவேடுகளில் பதியப்பட்டிருந்தமை |